**52. அரிவிசயர் கதை**

அரிவிசயர் என்பவர்முன்னாளில் வடமதுரையில் இருந்தவர். திருமாலிடம் பெருமால் கொண்டவர். எல்லா உயிர்களினிடத்தும்இரக்கம் உடையவர். இவர் சகநாதம் என்னும் பதிக்குப்போய்ப் பெருமாளைக் கண்டு தொழ



எண்ணினார்; புறப்பட்டுச் சென்றார். சென்றவர் வழியிலே ஓரூரில் ஒரு பொழிலில் தங்கினார்.. அப்பொழிலில் ஒருகாளிகோவில் அமைந்திருந்தது. அதில் எழுந்தருளியிருந்த காளி தேவிக்குப் பலியிடுமாறு ஒருவன் இரண்டு ஆடுகளைப் பிடித்து வந்தான். செய்தியை உணர்ந்த அரிவிசயர் விரைவாகஅவ்விடம் விட்டுப் புறப் பட்டார். காளிதேவி அரிவிசயர் பிறகே சென்றாள். "என்னு டைய கோயிலில் உண்டுசெல்லுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள். உடனே அரிவிசயர் நீ ஊனுண்ணும் தீவி னையை உடையயாதலால் நான் நின்பால் உண்ணேன் என்று கூறிவிட்டு விரைந்து சென்றார். அக்காளி அன்று முதல் பலிபெறுவதில்லை யென்று உறுதி கொண்டாள். அந்நாட்டு மன்னன் கனவில் தோன்றி "இனிமேல் எனக்கு யாரும்பலியிடாமல் தடை செய்வாயாக; பலி கொடுப்போர்கட்குத் தீமையை உண்டாக்கு வேன்" என்றுஅச்சுறுத்தினாள். அரசனும் அவ்வாறே பலியைத் தடை செய்தான். உயிர்க்கொலை நிறுத்தப்பட்டபடியால்அந்நாட்டு மக்களும் நலம்பல பெற்றனர். அருள் என்பது உயிர்களைக் கொல்லாமல் இருப்பது ; மருள் என்பதுஉயிர்த் தொகை களின் உடலைத் தின்னுதல். அறம் அல்லாததாகும் இச் செய்தியை அந்நாட்டு மக்கள் அரிவிசயரால் அறிந்தனர்.

(பக்தமாலை) (அருள்)